# மோனோக்ளோனல் ஆன்டிபாடி சிகிச்சை என்றால் என்ன?

நீங்கள் தீவிர கோவிட்-19 பாதிப்பைப் பெரும் அபாயத்தில் இருந்து கோவிட்-19 பரிசோதனையில் பாசிட்டிவ் முடிவு பெற்றிருந்தால் அல்லது பாசிட்டிவ் முடிவைப் பெற்ற ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தால், நீங்கள் மோனோக்ளோனல் (mAb) சிகிச்சையைப் பெறுவதைக் கருத்தில் கொள்ளவேண்டும். உங்கள் வயது, மருத்தவ வரலாறு மற்றும் எவ்வளவு நாட்களாக அறிகுறிகள் உள்ளன என்பதைப் பொறுத்து கோவிட்-19 க்கான mAb சிகிச்சையைப் பெற நீங்கள் தகுதிபெறலாம்.

mAb சிகிச்சையானது உங்கள் உடல் செல்களுக்குள் கோவிட்-19 ஐ ஏற்படுத்தும் வைரஸைத் தடுத்து உங்கள் உடலில் உள்ள வைரஸின் அளவைக் கட்டுப்படுத்தலாம். இதன் மூலம் உங்கள் அறிகுறிகளின் தீவிரம் குறையலாம் மற்றும் நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் தேவையைக் குறைக்கலாம்.

கீழ்கண்ட நபர்களுக்கு mAb சிகிச்சை உதவும்:

- தீவிர அறிகுறிகளைப் பெரும் அபாயம் அதிகமுள்ளவர்கள் **மற்றும்**
- கடந்த 7 அல்லது அதற்கும் குறைவான நாட்களாக அறிகுறிகளுடன் கோவிட்-19 பரிசோதனை முடிவில் பாசிட்டிவ் பெற்றவர்கள் **அல்லது**
- சமீபத்தில் பாசிட்டிவ் பரிசோதனை முடிவு பெற்ற ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் உள்ளவர்கள்

## • மோனோக்ளோனல் ஆன்டிபாடி என்றால் என்ன?

தொற்றுக்கு எதிராக சண்டையிட உங்கள் உடல் இயற்கையிலே ஆன்டிபாடிகளை உருவாக்கும். இருந்தாலும், கோவிட்-19 ஐ ஏற்படுத்தும் SARS-CoV-2 போன்ற புதிய வைரஸை அடையாளம் கண்டறிய வடிவமைக்கப்பட்ட ஆன்டிபாடிகள் உங்கள் உடலில் இல்லாமல் போகலாம். மோனோக்ளோனல் ஆன்டிபாடிகள், அல்லது mAb என்பவை ஒரு குறிப்பிட்ட தொற்றை (இந்த இடத்தில், SARS-CoV-2) எதிர்க்க ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டு உங்களுக்கு நேரடியாக செலுத்தப்படுபவை. நீங்கள் தீவிர அறிகுறிகளைப் பெறுவதற்கு அல்லது மருத்துவமனையில் சேர்க்கப்படும் அபாயம் அதிகமுள்ளவர்கள் என்றால் mAb சிகிச்சை உங்களுக்கு உதவலாம்.

கோவிட்-19 க்கான mAb சிகிச்சை கோவிட்-19 தடுப்பூசியை விட வேறுபட்டது. தடுப்பூசியானது உங்கள் உடலின் இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியைத் தூண்டுகிறது, ஆனால் வைரஸுக்கு எதிராகப் போதுமான ஆன்டிபாடிகளை உருவாக்க சில வாரங்கள் எடுக்கலாம். எனவே, உங்களிடம் வைரஸ் இருந்தால், mAb சிகிச்சையானது உங்கள் உடலைப் பாதுகாக்கத் தேவையான ஆன்டிபாடிகளைக் கொடுத்துவிடும். mAb சிகிச்சையானது தடுப்பூசிக்கு எதிரான நோயெதிர்ப்புத் தேவைக்கான மாற்றல்ல, ஆனால் நீங்கள் தீவிர கோவிட்-19 பெரும் அபாயமுள்ளவர்கள் என்றால் இது உங்களுக்கு உதவலாம்.

## • மோனோக்ளோனல் ஆன்டிபாடி என்னை நோய்வாய்ப்படுத்துமா?

ஆன்டிபாடி சிகிச்சைகளில் உயிருள்ள வைரஸ் எதுவும் இல்லை, அதனால் mAb சிகிச்சை மூலம் உங்களுக்கு கோவிட்-19 ஆபத்து இல்லை. இருந்தாலும், ஆன்டிபாடி சிகிச்சையில் சில பக்க விளைவுகள் இருக்கலாம். சாத்தியமான பக்கவிளைவுகள் மற்றும் அவற்றை நீங்கள் உணர்ந்தால் என்ன செய்வது என்பது குறித்து உங்கள் சுகாதார வழங்குநரிடம் பேசுங்கள்.

## • மோனோக்ளோனல் ஆன்டிபாடி சிகிச்சைக்கு நான் தகுதி பெறாவிட்டால் என்ன செய்வது?

நீங்கள் mAb சிகிச்சைக்குத் தகுதி பெறாதவர் என்று உங்கள் சுகாதார வழங்குநர் முடிவு செய்யலாம். அதற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். அனைத்து நிபந்தனைகளுக்கும் நீங்கள் தகுதி பெற்றிருக்க மாட்டீர்கள், அல்லது mAb சிகிச்சைக்குப் பொருந்தாத உடல்நிலை உங்களுக்கு இருக்கலாம். பிற சிகிச்சை முறைகள் பற்றிய தகவல்களுக்கு உங்கள் சுகாதார வழங்குநரைக் கேளுங்கள்.

## • மோனோக்ளோனல் ஆன்டிபாடிகளை நான் எப்படி பெறுவது?

படி 1: கோவிட்-19 பாசிட்டிவாக இருந்து 7 அல்லது அதற்கும் குறைவான நாட்கள் அறிகுறிகள் இருந்தால்.

படி 2: உங்கள் சுகாதார வழங்குநரிடமிருந்து பரிந்துரையைப் பெறவும்.

படி 3: ஒரு ஃபியூஷன் மையத்தைக் கண்டுபிடிக்கவும்.

mAb பெறுவதற்கு உங்கள் சுகாதார வழங்குநரால் பரிந்துரைக்கப்பட்டு கிடைக்கக்கூடிய இன்ஃபியூஷன் மையங்களுக்கு நீங்கள் வழிநடத்தப்பட்டிருக்க வேண்டும். **உங்களுக்கு ஒரு சுகாதார வழங்குநர் இல்லையென்றால்**, Combat COVID Monoclonal Antibodies Call Center (காம்பேட் கோவிட் மோனோக்ளோனல் ஆன்டிபாடிஸ் கால் சென்டரை) 1-877-332-6585 இல் தொடர்புகொண்டு உங்கள் அறிகுறிகள் மற்றும் சிகிச்சை குறித்து யாரிடம் பேச வேண்டும் என்று அறியுங்கள்.

Washington State Department of Health

DOH 825-031 March 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது mailto:ecivil.rights@doh.wa.gov ற்கு மின்னஞ்சல் செய்யவும்.